# 14 மணிகட்டிய ஆடு

கழுத்தில் மணி கட்டிய ஆடு புல் மேய்ந்தது. மலையடிவாரம் எங்கும் இடியுடன் மழை பெய்தது. மழைக்கும் இடிக்கும் பயந்த ஆடு, ஓடிச் சென்றது. அருகிலிருந்த மலைக்குகைக்குள் புகுந்து கொண்டது.



ஆடு மழையில் நனைந்ததால் குளிரால் நடுங்கியது. அதனால் கழுத்தில் கட்டியிருந்த மணி ஒலித்தது. சிறிது நேரத்தில் மழைவிட்டது. ஆடு நடுங்கியபடி குகைக்குள் நின்றது. அப்போது அந்த குகையில் வாழ்ந்து வரும் புலி வந்தது.

குகையின் வாசலில் நின்றபடி உள்ளே எட்டிப்பார்த்தது. தாடி ஆடு மணி ஒலிக்க நின்று நடுங்கியது. உள்ளே இருளாய் இருந்ததால் உருவத்தை அடையாளம் காணமுடியவில்லை.

உள்ளே இருப்பது யாரடா? என்று கோபமாக உறுமியது. ஆடு அச்சத்தால் நடுங்கியது. கழுத்தில் கட்டியிருந்த மணி டிங்.... டிங்.... டிங்.... என்று மேலும் ஒலி எழுப்பியது.

புதிய ஓசை கேட்டு அச்சமடைந்த புலி அவ்விடத்தை விட்டு ஓட்டம் பிடித்தது.

புலி ஓடுவதை நரி கண்டது. நரிக்குச் சிரிப்பு வந்தது. “புலியாரே! புலியாரே! ஏன் இப்படி அஞ்சி நடுங்கி ஓடுகிறீர்கள்" என்று கேட்டது. “நான் வாழும் குகைக்குள் ஒரு பயங்கரமானவன் வந்து விட்டான். புதிய ஒலியை எழுப்பி அச்சுறுத்துகிறான். அதனால்தான் பயந்து ஓடினேன்" என்று புலி பதில் சொன்னது.

“ஓ!...... அதுதான் ஓடினீரா? உமக்குப் பயம் என்றால் என்னுடன் வாரும். நான் பகைவனை விரட்டுகின்றேன்" என்றது நரி.


நரியின் வேண்டுதலைப் புலி மறுத்து விட்டது. அப்போது நரி “உமக்குப் பயமாக இருந்தால் எனது கழுத்துடன் உனது கழுத்தைக்கட்டிக் கொண்டு போகலாம்" என்றும் ஆலோசனை சொன்னது.



நரியின் அசமந்தப் புத்தியை ஆராயாமல் புலி சம்மதம் கூறியது.

இருவரும் கழுத்தை கயிற்றால் கட்டிக் கொண்டு சென்றனர். குகை வாயிலில் நின்று நரி உள்ளே எட்டிப் பார்த்தது. நரியைக்கண்ட ஆட்டுக்கு நடுக்கம் பிடிக்கவே மீண்டும் மணி ஒலித்தது.

அதிர்ச்சி அடைந்த புலி மீண்டும் தலை தெறிக்க ஓடியது. புலியின் கழுத்தில் கட்டப்பட்டிருந்த நரி வேகமாக ஓடமுடியாமல் இழுபட்டது. கல்லிலும் முள்ளிலும் அடிபட்டு இறந்து போனது. பாவம் நரி.



### செயற்பாடு 01

**சரியான வாக்கியத்தின் எதிரே சரியாயின் '✓' எனவும் பிழையாயின் '✕' எனவும் அடையாளமிடுவோம்.**
**හරි නම් '✓' ලකුණ ද වැරදි නම් '✕' ලකුණ ද යොදන්න.**

i) மலை அடிவாரத்தில் ஆடு புல் மேய்ந்தது. (.............)

ii) புலி குகையில் வாழ்ந்து வந்தது. (.............)

iii) நரி புத்திசாலி மிருகம் ஆகும். (.............)

iv) புலி ஒருபோதும் ஆராயாமல் முடிவெடுக்காது (.............)

v) மழைக்கும் இடிக்கும் நரி பயப்பட்டது. (.............)

**தன்மை ஒருமை வாக்கியங்கள்**
**උත්තම පුරුෂ ඒක වචන පද වාක්‍යය**

1) நான் ஓடுகிறேன்.


2) நான் செல்வேன்.

நான் பயந்து ஓடினேன்.
நான் உன்னுடன் வருவேன்.
நான் பார்த்தேன்

**தன்மை பன்மை வாக்கியங்கள்**
**වෙන් කොට ලියන්න.**

1) நாம் இருவரும் செல்வோம்.
2) நாங்கள் அங்கு போவோம்.

நாம் / நாங்கள் இருவரும் ஓடினோம்.
நாம் / நாங்கள் இருவரும் உன்னுடன் வருவோம்.
நாம் / நாங்கள் இருவரும் பார்த்தோம்.



## செயற்பாடு 02

**பொருத்தமான முடிக்கும் சொல்லைக் கொண்டு வாக்கியத்தை அமைப்போம்.**
**සුදුසු ක්‍රියා පද යොදා වාක්‍ය සම්පූර්ණ කරන්න.**

செல்வேன், பார்த்தேன், ஓடினேன், வருவேன், செல்வோம், போவோம், பார்த்தோம், வருவோம், ஓடினோம்.

**உ-ம்** நான் பயந்து ஓடினேன்.


1) நாங்கள் இருவரும் ........................................................
2) நாங்கள் குகையைப் ......................................................
3) நான் நாளை காலை ......................................................
4) நான் அவனைப் ..............................................................
5) நாங்கள் நாளை மாலை ................................................

**குறில் - நெடில் சொல் வேறுபாட்டை அறிந்து வாசிப்போம்**
**හ්‍රස්ව දීර්ඝ ශබ්ද සහිත වචන හඳුනා ගනිමු.**

| | | |
|---|---|---|
| தடி | - | தாடி |
| மலை | - | மாலை |
| படம் | - | பாடம் |
| நரி | - | நாரி |

**ஒத்த கருத்துச் சொற்கள்**
**සමානාර්ථ පද**

| | | |
|---|---|---|
| மலை | - | வரை, கிரி |
| ஒலி | - | சத்தம், ஓசை |
| கோபம் | - | சினம், சீற்றம் |
| அச்சம் | - | பயம் |
| பகைவன் | - | எதிரி |
| புத்தி | - | அறிவு |
| அசமந்தம் | - | மந்தம் |



## செயற்பாடு 03

**தமிழ்ச் சொற்களுக்குப் பொருத்தமான சிங்களமொழிச் சொல்லைத் தெரிவு செய்து அம்புக்குறி மூலம் இணைப்போம்.**
**දෙමළ වචනයට ගැළපෙන සිංහල වචනය තෝරා යා කරන්න.**

| | |
|---|---|
| ஆடு | වලිගය |
| புலி | සීනුව |
| நரி | එළුවා |
| மலை | කන්ද |
| குகை | නරියා |
| கல் | ගල |
| மழை | කොටියා |
| வால் | ගුහාව |
| முள் | කටු |
| மணி | වැස්ස |

## இரண்டாம் மொழி - தமிழ்
## பாடத்திட்டம் - தரம் 7
## தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்கள், உள்ளடக்கம்

1.0 சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை முறையாக உச்சரித்துப் பேசுவார்.

1.1 சொற்களை முறையாக உச்சரித்துக் கூறுவார். 10

நாளாந்த தேவைகளுக்காகப் பிரயோகிக்கும் சொற்கள்

- உறவுப் பெயர்கள்
- பழவகை (10), மரக்கறி வகை (20)
  (இலைவகை - 5, காய்கறி - 10, கிழங்கு வகை - 5)
- மிருகங்கள் (10)
  (வீட்டு மிருகங்கள் - 5, காட்டுப் பறவைகள் - 5
  (வீட்டில் வளர்க்கும் பறவைகள் - 5, காட்டுப் பறவைகள் - 5)
- வாகனங்கள் (15)
  (தரைமார்க்க வாகனம் - 10, நீர்மார்க்க வாகனம் - 5)
- வீட்டில் காணப்படும் பொருட்கள்
  (சமையலறை - 10, வரவேற்பறைப் பொருட்கள் - 5)
- பாடசாலை அதிபர் அலுவலகத்தில்
  காணப்படும் பொருட்கள் - 10)
- இலக்கங்கள்
  (ஒற்றை எண்கள் - 10, இரட்டை எண்கள் - 10)
- நேரங்களை (மணி) அறிமுகம் செய்தல்
- ஒத்து ஒலிக்கும் சொற்கள்
  உ-ம் 1: மலை, தலை, வலை
  உ-ம் 2: நாடு, காடு, வீடு
- குறில் நெடிலால் வேறுபடும் சொற்கள்
  கலை, மலை, சிலை - குறில்
  காலை, மாலை, சீலை - நெடில்
- இருமொழிக்கும் பொதுவான சொற்கள் (10)
- ஒருமை பன்மைச் சொற்கள்
  பழம், படம், மரம், தினம், தரம், தோட்டம், சிங்கம்
  ('ம்' இல் முடிவடையும் சொற்கள் 'ங்கள்' என பன்மையாதல்)
- ஒத்த கருத்துள்ள சொற்கள் (20)
  (சூரியன், சந்திரன், வீடு, தினம், அரசன், சாப்பாடு)
- மரம், நதி, கனி, மிருகம், பறவை போன்ற சொற்கள்
- ஆண்பால், பெண்பாற் சொற்கள்
- தன்மை, ஒருமை, தன்மைப் பன்மையில் வரும் வினைச் சொற்கள் (10)
  நான் குறித்தேன், நாங்கள் குறித்தோம்.

1.2 சொற்றொடர்களை உச்சரித்துக் கூறுவார் 02

1.3 வாக்கியங்களை சரியாக உச்சரித்துக் கூறுவார். 02

- மாணவன் தன்னைப் பற்றி 'நான்' என்ற தலைப்பில் 5 வாக்கியங்கள் கூறுதல்

'எனது அம்மா' (5 வாக்கியங்கள்)

- பாடங்களின் உதவியுடன் வாக்கியங்கள் கூறுதல் 5 படங்கள்)
- சிறு வினாக்களுக்கு விடை கூறுதல் (8 வினாக்கள்)

(மாணவர் பற்றியதும், மாணவர் தொடர்புடையதுமான வினாக்கள் உ-ம்: உங்கள் நண்பரின் பெயர் என்ன?)

2.0 கட்டளைகள், அறிவுறுத்தல்களுக்கு ஏற்றவாறு கருத்துக்களை முன்வைப்பர் 01

2.1 - கட்டளைகளுக்கேற்ப துலங்குவார் (05)

(கை கட்டுங்கள், கை தட்டுங்கள், இங்கே வாருங்கள், புத்தகத்தை எடுங்கள்)

2.2 - அறிவுறுதல்களுக்கேற்ப துலங்குவார் (05)

(சாப்பிட முன் கை கழுவுங்கள், குப்பைகளை வகுப்பறைக்குள் போடாதீர்கள், ஆசிரியர் வரும்வரை அமைதியாக இருங்கள்)

3.0 நாளாந்த தேவைகளை பூர்த்தி செய்வதற்காக உரையாடுவார்

3.1 - பண்புடன் உரையாடுவார்

(தயவுசெய்து, நன்றி, மன்னிக்கவும், வருந்துகிறேன், வாழ்த்துகிறேன்)

3.2 தகவல்களைப் பெறுவதற்காக வினாவுவார்

- உங்கள் பாடசாலை அதிபர் யார்?
- இப்போது நேரம் என்ன?
- இலங்கையின் தலைநகரம் எது?

4.0 பாடல்களைப் பாடுவார் 03

4.1 பாடல்களை இசையோடும், நயத்தோடும் பாடுவார் 03

உ-ம்:

1) தாகமுள்ள காகம் 2) வண்ணத்துப் பூச்சி
3) புள்ளி புள்ளி மானே 4) கணினி நண்பன்
5) அப்பா என்னை அழைத்துச் சென்றார்

5.0 கொடுக்கப்படும் தலைப்பின் கீழ் பேசுவார் (5 வசனம்)

1. எனது ஆசிரியர் 2. எனது பாடசாலை
3. எனது செல்லப் பிராணி 4. எனது நண்கள்

6.0 கேட்டுக் கிரகித்தவற்றைக் கூறுவார் 02

6.1 வினாக்களுக்கு விடையளிப்பார் (இலக்கணம்) - (10 வினாக்கள்)
(உயிர் எழுத்துக்கள் (12) - குறில் (5) - நெடில் (7),
மெய்யெழுத்துகள் (18)
குறில் எழுத்துக்குரிய நெடில் எழுத்தை இனம் கண்டு கூறுதல்)

7.0 சொற்களை சேர்த்தும் பிரித்தும் கூறுவார் 01

சொற்களை சேர்த்துக் கூறுதல்.

- தென்னை மரம் + மரம் (இயல்பு)
- தமிழ் + புத்தகம், வாழை + பழம் (தோன்றல்)

சொற்களைப் பிரித்துக் கூறுதல்

- வரிக்குதிரை = வரி + குதிரை (தோன்றல்)
- தமிழ்மொழி = தமிழ் + மொழி (இயல்பு)

8.0 தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொற்களை கூறுவார் (15) 01

(ஏற்கனவே கற்ற பாடப்பரப்பில் இருந்து முக்கியமானது எனக்
கருதும் 15-20 சொற்களைத் தேர்வு செய்தல்)
(உ-ம்: உணவு, நேரம், நிறம், பூ, பழம், மிருகம், பறவை, மரக்கறி)